அசல்

✓ 23.8.1934 R. பஞ்சநதம்.

அசல் – 1.

திரிசிரபுரம் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்,

(இரௌத்திரியில் நிறுவப்பெற்றது.)

தெப்பக்குளம்.
திரிசிரபுரம்,

23—8—1934.

தலைவர் :
Rao Bahadur,
T. M. நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., M.L.C.,

அமைச்சர்கள் :
S. K. தேவசிகாமணி, B.A., L.T.,
R. பஞ்சநதம் பிள்ளை, [illegible]

பெருங்கருணைமிக்க பெரியீர்,

வணக்கம். நலம். தாங்கள் 18-8-34

எழுதிய கடிதம் வரப்பெற்றேன். அதில் கண்ட விஷயங்களை அன்பர் ஸ்ரீமான் நடேச முதலியார் அவர்களுக்குந் தெரிவித்தேன். அன்னோர் விரைவாகக் கூட்டத்தை அடுத்த திங்கட்கிழமை நிலை. ஆகஸ்டு மீ 27ந்தேதி நடத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஸ்ரீமான் T.C. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களுக்குப் பிரசங்க விஷயமாய்க் கடிதங்கள் எழுதியும் இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. காலதாமதமாகின்றதால் நீங்கள் கூறியபடி அச்சுக் கொடுத்திருக்கிறோம். உத்தரவை அனுப்பி வைக்கின்றேன். தாங்கள் எப்பொழுது புறப்பட்டு எப்பொழுது இவ்விடம் வந்து சேருகிறீர்கள் என்பதைப் பற்றிப் புறப்படுமுன் தெரிவிக்கவும். எங்கள் பள்ளிக்கூடத்திலோ [illegible] ஹோட்டலிலேயே தங்கியிருக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தங்கள் அன்புள்ள
R. பஞ்சநதம்